எல்லோர்க்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்!



புத்துணர்ச்சிக்கும்
உற்சாகத்திற்கும்
பாவியுங்கள்
அண்ணா
கோப்பி

அண்ணா இண்டஸ்றீ
இணுவில் தெற்கு - இணுவில்.

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 10 [14-1-69] இதழ் 337
யாழ்ப்பாணம் இலங்கை தை 1 ஷவ். 24 செவ். கிழமை

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
D. சேனாதிராஜா
(பல் கட்டுபவர் - கண் பரிசோதகர்)
9, மெயின் வீதி - யாழ்ப்பாணம்.

# ஜி. ஜி.-கோப்பாய் எம்.பி. கட்டி தழுவினர்

## நகரில் புதிய மேயருக்கு அமோக வரவேற்பு

(நமது நிருபர் கே. யோகநாதன்)

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். நாகராசா, உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் ஆகியோர் மாநகர மண்டபத்திலிருந்து தமிழ் காங்கிரஸ் தலைமைக்காரியாலயத்திற்கு மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழ் காங்கிரஸ் காரியாலயத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை மேயர் கட்டியணைத்துக்கொண்டார் அச்சமயம் அங்கு வந்த கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளையையும் திரு. பொன்னம்பலம் மேயருடன் சேர்த்துக் கட்டியணைத்துக்கொண்டார்.

அங்கு திரண்டு நின்ற மக்கள் எதிர்பாராத இந்த நிகழ்ச்சியைப் பார்த்து மகிழ்ச்சி ஆரவாரஞ்செய்தனர்.

மேயரும், உதவி மேயரும் உறுப்பினர்களும் தமிழ்க் காங்கிரஸ் ஆலோசனை அறைக்குச் சென்றனர். தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தனர். சுமார் 15 நிமிடங்களின் பின்னர் திரு. பொன்னம்பலம், மேயரையும், உதவிமேயரையும் வழியனுப்பிவைத்தார் பொலிஸ் ஜீப் முன் ஆசனத்தில் மேயர் நாகராசாவும், முன்னாள் மேயர் திரு. ரி. எஸ். துரைராசாவும் அமர்ந்திருந்தனர். பின் ஆசனத்தில் உதவி மேயர் திரு. ஏ. துரைராசசிங்கம் அமர்ந்திருந்தார். பின்னால் மற்றொரு ஜீப்பில் பொலிஸார் சென்றனர்.

### மேயர் நன்றி

மேயர் திரு. நாகராசா சபையில் கூறியதாவது:

''சிறந்த நிர்வாகம் அமையவே தமிழ்க் கட்சிகள் இரண்டும் பாடுபட்டன. யாழ்ப்பாண எம். பி. திரு. பொன்னம்பலத்திற்கு இச்சபை மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. யாழ். நகர முன்னேற்றத்திற்காக அவர் சகல நடவடிக்கைகளையும் எடுத்துவந்திருக்கிறார். அவருக்குப் புகழ் மாலை சூட்ட நான் அருகதையற்றவன். மேயர் தெரிவில் மிகவும் அக்கறை காட்டி, எடுத்த முயற்சி வெற்றியளித்ததையிட்டு மகிழ்ச்சி. அவருக்கு என்றும் நான் கடமைப்பட்டுள்ளேன். தமிழரசு சார்பில் கோப்பாய் எம். பி.

(5-ம் பக்கம் பார்க்க)



பொங்கலோ பொங்கல், பொங்கிவருதம்மா! இன்பம் பொங்க, அன்பு பொங்க, அறம் பொங்க இல்லந்தோறும் இன்று பொங்கல் பொங்கும்.

—படம்—புளக்—கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.

## சபையில் நடந்தது

யாழ்ப்பாணம், செவ்.

மாநகரசபையின் முதலாவது புதிய மேயராக தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். நாகராசா தமது ஆசனத்தில் அமர்ந்துகொண்டே யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு தான் மேயராகத் தெரிவு செய்யப்பட்டதைத் தெரிவித்தார் இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், காங்கிரஸ் நிர்வாகக் காரியதரிசி திரு. தா. ச. சங்கரப்பிள்ளை மற்றும் காங்கிரஸ் பிரமுகர்கள் சபைக்கு வந்தனர். சிறிதுநேரத்தின் பின்னர் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினமும், தமிழரசு பிரமுகர்களும் சபைக்கு வந்து விசேஷ பார்வையாளர் பிரிவில் அமர்ந்தனர். கூட்ட நிகழ்ச்சி முடிவடையும்வரை இவர்கள் அங்கு அமர்ந்திருந்தனர். கூட்டத்தின் கடைசி நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்த சமயம் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும் அங்கு வந்தார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு மூன்றுவது ஆசனத்தில் திரு. ஓசி கொரியா அமர்ந்திருந்தார்.

மாநகரசபை தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற இரு அபேட்சகர்களும் சபைக்கு வந்திருந்தனர். ஒருவர் படப்பிடிப்பாளராகவும் மற்றவர் பத்திரிகை நிருபராகவும் வந்திருந்தனர்.

கமிஷனர் திரு. எ. ரி. சுந்தரத்தின் கூட்ட அறிவித்தல் முதல் தமிழிலும் பின் ஆங்கிலத்திலும் வாசிக்கப்பட்டதை ஒழுங்குசெய்திருந்த கமிஷனரை அங்கத்தவர்கள் பாராட்டினர்.

### மூன்று கார்களில்

நேற்று மாலை 2 மணிக்கு அங்கத்தவர்களான திரு. ஏ. விஸ்வநாதனும் திரு. மார்க்கண்டுவும் சபைக்கு வந்தனர். சரியாக 2-30 மணிக்கு மூன்று கார்களில் துரையப்பா குழுவினர் வந்தனர். இவர்களுடன் திரு. ஓசி கொரியாவும் மற்றும் சிலரும் வந்திருந்தனர்.

சரியாக 2-49 மணிக்கு தமிழ் காங்கிரஸ் தமிழரசு உறுப்பினர்கள் 12 பேர்கள் சபைக்கு வந்து ஆசனங்களில் அமர்ந்தனர். சிறிது நேரத்தால் சமசமாஜகட்சியைச் சேர்ந்த திரு. எ. விஸ்வநாதனும் திரு. மார்க்கண்டுவும் வந்து அமர்ந்தனர்.

3 மணியானதும் கமிஷனர் திரு. ஏ. ரி. சுந்தரம் வந்து அமர்ந்தார். என்ன [illegible] தெரியாத நிலையில் திரு. தெய்வேந்திரன் சிறிதுநேரம் திரு. ஆ. துரைராஜசிங்கத்துடன் கதைத்துக்கொண்டிருந்தார். அச்சமயம் திரு. துரைராசசிங்கம் திரு. நாகராசாவிற்கு அருகில் அமர்ந்திருந்தார். திரு. ஆ. விஸ்வநாதன் மூன்றுவது வரிசையில் தமிழரசு - காங்கிரஸ் உறுப்பினர்களுடன் அமர்ந்திருந்தார். சுயேச்சை உறுப்பினரான திரு. மார்க்கண்டு துரையப்பாவிற்கு அருகில் அமர்ந்திருந்தார். அதனால் எதுவும் நிச்சயமாகக் கூறமுடியாதநிலைமை கடைசியில் ஒருவாறுமேயர் உபமேயர் தெரிவு நடந்து முடிந்தது.

மேயர் பதவிக்கு திரு. நாகராசாவின் பெயரை திரு. அ. நடராசா பிரேரித்தார். இதனை திரு. தா ச. துரைராசா அனுவதித்தார். திரு. விஸ்வநாதன் பெயரை திரு. அல்பிரட் தங்கராசா துரையப்பா பிரேரித்தார். இதனை திரு. வி. தெய்வேந்திரன் அனுவதித்தார். திரு. நாகராசாவிற்கு 12 வாக்குகளும் திரு. ஏ. விஸ்வநாதனுக்கு 11 வாக்குகளும் கிடைத்தது. உதவி மேயர் திரு. ஆ. துரைராசசிங்கம் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். அங்கத்தவர்கள் தங்கள் பாராட்டைத் தெரிவித்தனர்.

### கலரியில் கூச்சல்

சபையில் திரு. ஏ. ரி. துரையப்பா பேசிக்கொண்டிருந்தசமயம், கலரியில் இருந்த ஒருவர் உற்சாகமாகக் கூச்சலிட்டார். மேயர் இதனைப் பொலிசாரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். பொலிஸார் அந்த நபரை வெளியேற்றினார்கள்.

### எதுவும பேசவில்லை

முதன்முதலாகத் தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினரான திருமதி அந்தோனியா சுவாமிநாதன் சபையில் அமைதியாக இருந்தார். நேற்றைய கூட்டத்தில் அவர் எதுவுமே பேசவில்லை.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 'ஈழநாடு' காரியாலயத்துக்கு இன்று (14-1-69) செவ்வாய்க் கிழமை விடுமுறையாதலால் (15-1-69) புதன் கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

அஹிம்ஸை இருதயத்தில் இல்லாமல் செயலில் மட்டும் இருந்தால் நாம் எதிர்பார்க்கும் பலனை அடைய முடியாது. அஹிம்ஸை என்பதுமனோ திடம் உடையவர்களுக்கு மட்டுமே உரியது.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box- 49, Jaffna. Telephone/ 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 1-ந் திகதி
(14-1-69)


## தைபிறக்கிறது வழிபிறக்கட்டும்

இன்று தைப்பொங்கல் திருநாள். 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழர் நம்பிக்கை. அந்த நம்பிக்கையை ஈழம் வாழ் தமிழ் மக்கள் சென்ற சில வருடங்களாக படிப்படியாக இழந்து வந்துள்ளனர். இந்த வருடத்திலாவது அந்த நம்பிக்கை சிறிதளவாவது கைகூட வேண்டும்.

''உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு'' என்பது ஔவை மூதாட்டியின் வாக்கு. ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்'' என்ருர் பாரதியார். கம்பர், வள்ளுவர், ஔவை முதல் பாரதியும் பாரதிக்குப் பின் வந்தவர்களும் கூட உழவும் தொழிலும் தான் மேன்மை எனப் போற்றியிருக்கின்றனர். அரசாங்க உத்தியோகத்தை அவர்கள் பெருமைப்படுத்தவில்லை. தமிழன் உழவையும் தொழிலையும் நம்பியே வாழ்ந்தான். 'மேழிச் செல்வம் கோழைபடாது'என்று அவன் கூறியது வெறும் வார்த்தையல்ல. அனுபவித்து, உணர்ந்து கூறியது, நாற்காலி உத்தியோகத்தை தமிழன் எப்பொழுது நாடினுனே அன்றிலிருந்து பிடித்தது தொல்லை.

தமிழன் பழம் பெருமையைப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஆனல் பழமையை மறந்துவிடவும் கூடாது. பழமையை நினைத்து புதுமைக்கு வழிகாணவேண்டும். இன்று காலம் மாறுகிறது. நாற்காலி உத்தியோகத்தை இனியும் நம்பிப் பயனில்லையென்பதை தமிழர் மட்டுமல்ல மற்றையோரும் உணரத் தலைப்பட்டு விட்டனர். அந்நிய ஆட்சியினர் தமது நலனுக்காக வகுத்த கல்வித் திட்டமும் நிர்வாக முறையும் நாட்டில் உழவையும் தொழிலையும் மறக்கச் செய்து நமது தேவைகளுக்கு வெளிநாட்டாரின் கையையே எதிர்பார்த்திருக்கச் செய்ததென்பதை இலங்கை உட்பட சுதந்திரமடைந்த நாடுகள் அறிந்துகொள்ள ஆரம்பித்து விட்டன. ஆனுலும் பல்லாண்டுகளாக ஏற்பட்ட பழக்கத்தை, மனப்பான்மையை உடனடியாக மாற்றிக் கொள்ள முடியவில்லை.

இலங்கை உணவு உற்பத்தித் திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து சிறிது முன்னேற்றமும் கண்டு வருகிறது. அரிசி இறக்குமதி சிறிது குறைந்திருக்கிறது. உப உணவு உற்பத்தியிலும் கைத்தொழில் அபிவிருத்தியிலும்இப் போழுது அக்கறை செலுத்தத் தொடங்கியிருக்கிறது. தமிழ் நாட்டில் இன்று ஏர்முனைத் திருநாள் கொண்டாட்டம் ஆரம்பமாகிறது. உணவு உற்பத்தி கைத்தொழில் விருத்தி ஆகியவைகளில் தமிழக அரசாங்கம் மக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இக் கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

தைப்பொங்கல் தமிழர் திருநாளாக மட்டுமில்லாமல் மனித குலம் முழுவதற்கும் பொது நாளாக, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து, மனித குலத்துக்கு வாழ்வளிக்கும் பணிக்கு வழி காட்டும் நாளாக, உலகமுழுவதும் கொண்டாடி மகிழ்வதற்கு தமிழ் மக்கள் எடுத்துக்காட்டாக வாழ இத் தைத் திரு நாள் விளங்க வேண்டுமெனப் பிராத்திப்போம்,

## உலக சமஷ்டி அரசாங்கம்

''என்ருே ஒருநாள் உலக சமஷ்டி அரசு தோன்றியே தீரும்'' என்று நமது பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா லண்டனில் காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்.

உலகம் ஒரு குடும்பமாக வாழும் காலம் வரவேண்டுமென்பதில் இலங்கைப் பிரதம மந்திரியைப் போலவே மற்றும் பல தலைவர்களுக்கும் விருப்பமும் நம்பிக்கையுமுண்டு. ஆனல் இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதுதான் கேள்வி. ஒருசில மைல் தூரத்தை பல மணி நேரம் கட்டை வண்டியில் கடந்து செல்ல வேண்டியிருந்த காலம் மாறி பல்லாயிரக் கணக்கான மைல் தூரத்தை ஒரு சில மணி நேரத்தில் கடக்கும் காலமும், எங்கோ, எந்தக் கண்டத்தின் மூலையிலோ நடக்கும் சம்பவத்தை அடுத்த நிமிஷம் வேருெரு கண்டத்தின் ஒரு மூலையிலிருந்து அறிந்து கொள்ளக் கூடிய காலமும் இது. இந்த அளவுக்கு உலகம் சுருங்கி வந்திருக்கிறது. உலக அமைதியைப் பாதுகாப்பதற்கென உலக அரங்கமான ஐ. நா. ஸ்தாபனம் நிறுவப் பட்டிருக்கிறது. இங்கு உலகின் பல்வேறு நாடுகளும் அங்கம் வகிக்கின்றன. இந்த நாடுகள் இனத்தால் மதத்தால், மொழியால் பழக்க வழக்கங்களால் வேறுபட்டவை. ஒரே கூரையின் கீழ் இவை ஒன்று கூடியிருப்பினும் அவைகளுக்கிடையில் வேறுபாடுகள் முற்ருக நீக்கப் பட்டு விட்டனவா? 100 கோடி மக்கள் வாழும் [illegible] சீனவையே உலக ஸ்தாபனம் [illegible] ஒதுக்கி வைத்திருக்கிறது. காமன்வெல்த் குடும்பத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கிடையில் கூட வேறுபாடுகள் இல்லையா? இந்த நாடுகளுக்கிடையில் கூட போட்டியும் பொருமையும் பூசலும் சச்சரவும் அச்சமும் அவநம்பிக்கையும் நிலவுகின்றன. நாடுகளுக்கிடையில் மட்டுமல்ல சிறிய நாடு ஒன்றில் வசிக்கும் மக்களுக்கிடையில் கூட இன, மத, மொழி அடிப்படையில் வேறுபாடும், போட்டியும் பூசலும் நிலவுகிறது. இலங்கைப் போன்ற நாடுகள் அரசியல் சுதந்திரமடைந்தும் பொருளாதார சுதந்திரமடைய முடியாமலிருப்பதற்கு இதுவே முக்கிய காரணம்.

மனித உரிமைகளை ஒவ்வொரு நாடும் மதித்து நடந்து உள்நாட்டில் ஐக்கியத்தை நிலை நாட்டினுல் திரு. டட்லி நம்பும் உலக சமஷ்டி ஆட்சி ஏற்படவும் உலகம் ஒரு குடும்பமாக வாழும் காலமும் அதிக தூரத்திலிருக்காது. இந்த ஐக்கியத்துக்கு இலங்கை வழி காட்ட வேண்டும். உலக சமஷ்டி அரசாங்கத்துக்கு முதற் படியாக [illegible] காமன்வெல்த் நாடுகள் முன்வருமா?

# தீவுப்பகுதி செய்திகள்

### தலைமையாசிரியர் இல்லை

அல்லைப்பிட்டி, திங்கள்

புங்குடுதீவுஊரைதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலையில்கடமையாற்றியதலைமை ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டு பலகாலமாகியும் இதுவரை இப்பாடசாலைக்கு தலைமையாசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லை. அனலை தீவு வடலூர் தெற்கு அரசினர் பாடசாலையிலும் தலைமையாசிரியர் இல்லாமலிருந்து வருகிறது.

0 0 0

### அமைச்சரின் பாராட்டு

வேலணை அரசினர் வைத்தியசாலையில் உள்ளவளவில் அரசினரின் விவசாயமுறைப்படி விவசாயம் செய்ததை யிட்டு இப்பகுதிக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் திரு.ஈ, எல். சேனநாயக்கா இங்கு கடமையாற்றும் அப்போதிக்கரிக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். வைத்தியசாலை வளவில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல்தடவையென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

0 0 0

### கடலில் தாக்கிய விசாரணை ஆரம்பம்

நயினுதீவுக் கடலில்வைத்து மீன்பிடியாளர்களை மதுபரிபாலன ஊழியர்கள் தாக்கியது சம்பந்தமாக ஊர்காவற்றுறை எம்.பி. திரு. நவரத்தினம் உள்நாட்டமைச்சரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து பூர்வாங்கவிசாரணைகளை மதுபரிபாலன இலாகா உதவிக் கமிஷனர் ஆரம்பித்துள்ளார்.

## 'நாவலரால் தொடக்கப்பட்டதை சைவப்புலவர் நடத்தவேண்டு'

### உதவிஅரசங்க அதிபர் வேண்டுகோள்

''இலங்கை சுதந்திரமடைந்தபின்பு வேறுசமயங்களில் எழுந்த எழுச்சி சைவசமயத்தை பொறுத்தவரையில் இல்லை. நாவலரால் தொடக்கப்பட்ட இந்த எழுச்சியை சைவப்புலவர் சங்கம் செய்து வைக்கவேண்டும்'' என யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் உடுவில் நாடக விழாவில் கேட்டுக் கொண்டார்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் இணுவில் இசை' நடன கிராமிய கலைக் கல்லூரியின் ஆதரவுடன் உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் நடைபெற்ற சைவசமய நாடக விழாவுக்கு தலைமைவகித்துப்பேசுகையிலேயே அவர் இவ்வாறு டேட்டுக் கொண்டார்.

உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் இவ்விழாவை ஆரம்பித்து வைத்தார்.

இணுவில் இசை நடன கிராமியக் கலைக் கல்லூரி செயலாளர் சி. சண்முகலிங்கம் வரவேற்புரை நிகழ்த்திஞர்.

உதவி அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

சைவமக்களாகியநாம்அகில இலங்கை சைவப்புலவர்சங்கத்துக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் சமய வளர்ச்சியை மனத்திற் கொண்டு சமய நாடக விழாவை பல்வேறு நாடச மன்றங்கள் பாடசாலைகள், ஆகியவற்றை ஒன்று படுத்தி ஓர் புதியஉற்சாகம் ஊட்டுகிருர்கள். பிரசாரத்திற்குரிய ஓர் சாதனம் நாடகம். எனது 12 வயதில் சத்தியவான் சாவித்திரிநாடகம் பார்த்து அதன் தத்துவத்தை கல்லில் எழுதிய எழுத்துப்போல் என் நெஞ்சில் பதித்துக் கொண்டேன்.

இச்சங்கத்தினரின் இந்த முயற்சி இந்தவருடத்துடன் முடிந்துவிடாமல் வருடா வருடம் தொடர்ந்து நடைபெற வேண்டு மென்றுவிரும்புகின்றேன், நாடுசுதந்திரம்அடைந்த பின்னர் வேறு சமயங்களுள் எழுந்த எழுச்சி சைவசமயத்தில்இல்லை.

பிரித்தானிய சாம்ராஜ்ய வளர்ச்சியும், கிறிஸ்துவமத வளர்ச்சியும் பின்னிப்பிணைந்து சென்றன. நமதுமக்களும், நமது சமயமும் அதே போல் அத்து விதமாக கலக்க வேண்டும். இன்றைய அரசாங்கம் சைவப் புலவர்களுக்கு தகுந்த அந்தஸ்து அளிக்கத்தவறி விட்டது, இக்குறை நமது ஆட்சிமன்ற உறுப்பினர்கள் நிவர்த்தி செய்யவேண்டும்.

உடுவில் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் புத்தமதவளரச்சிக்கு எவ்விதம் அநாகரிகதர்மபாலபணிசெய்தாரோ அவ்விதம் நாவலர்சைவ சமயத்துக்குப் பணி செய்தார். வருங்காலத்தில் சைவசமயம் வளர சைவப்புலவர்கள் தான் வழி வகுக்கவேண்டும்.

சைவப் புலவர் சங்கத்தலைவர் திரு. எஸ். செல்லையா பேசும்போது: சைவப்புலவர்களுக்குரிய அந்தஸ்து இதுவரை கொடுபடாதது வருந்தற்குரிய விஷயமாகும். சர்வகலாசாலையில் இந்து கலாசாரம் படிப்பிக்க தகுந்த ஆட்கள் இல்லை. என்ற சாக்குக் காட்டி இந்து கலாச்சாரம் படிப்பிக்கிருர்களில்லை, வேண்டுமானுல் தகுந்த ஆட்களை எங்கள் சங்கம் கொடுத்துதவும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் எந்த பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ருர்? சர்வகலாசாலைகள் அவரின் திறனைக் கண்டு ''கலாநிதி'' பட்டம் கொடுத்து கௌரவித்து பேராசிரியராக்கிக் கொண்டது.

## வெறிக்கு முட்டை

திருக்கோணமலை திங்கள்

மூதூர்க சிப்புத்தயாரிப்பாளர்கள் கசிப்பு வியாபாரத்தில் ஒரு புதிய முறையைக் கையாளுகிருர்களாம். பொலிஸாரிடமிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக முட்டைக் கோதுகளில் கசிப்பை ஊற்றி அடைத்து முட்டை வியாபாரம் செய்வது போல் விற்பனை செய்கிருர்களாம்.

வியாபாரம் செய்பவர்கள் வைத்துள்ள இவ் முட்டைகளை, முட்டை வாங்கச்செல்பவர்கள் கேட்டால் விலைக்குக் கொடுக்கிருர்கள் இல்லையாம். முட்டையை விலைக்கு விற்கமறுக்கும் வியாபாரிகள் மீது சந்தேகம் கொண்ட சிலர் பொலிசில் புகார் செய்துள்ளதாகவும் தெரிகிறது.

ஆஸ்பத்திரி

## ஊழியர் பற்றி புகார்

பேராதனை, திங்கள்

கண்டிஆஸ்பத்திரியில் இரவில் கடமையாற்றும் ஊழியர்கள் நோயாளர்களைக் கவனியாது சூதாட்டத்திலும் நித்திரையிலும் தங்கள் நேரத்தைக் கழிப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரவில் மதுபோதையில் வரும் ஊழியர்கள் நோயாளிகளிடமே பணம் கேட்பதாகவும் அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள. இவர்களைப்போலவே இரவில் வரும் பெண்கண்காணிகளும் வீட்டு வேலைகளை அங்குகொண்டுவந்து செய்கிருர்களாம்.

## கத்திக்குத்து

பம்பலப்பிட்டி திங்கள்

வேலாயுதம் சுப்பிரமணியம் கத்தியால் குத்தப்பட்டு படுகாயமடைந்த நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு ஹவ்லக் வீதியில் வைத்து இனம் தெரியாத மூன்று நபர்களால் இவர் குத்தப்பட்டாராம். இம்மூன்று நபர்களையும் தேடி, நாரகன்பிட்டிய பொலிசார் வலைவிரித்துள்ளனர்-

## கட்டிய அன்றே ...

சங்கானை திங்கள்

திருமணம் நடந்தஇரவே, தன்னைக் கட்டிய கணவனைக் கைவிட்டு வேருெருவருடன் ஓடிப்போய்விட்டாராம் இளம்பெண் ஒருவர்.

சண்டிலிப்பாயில் நடைபெற்ற இச்சம்பவம்பற்றி பொலிஸில் புகார்செய்யப் பட்டுள்ளது. வேருெரு வாலிபரையே இப்பெண் திருமணம்செய்ய எண்ணியிருந்ததாகவும், ஆனல் பெண்ணின் பெற்ருேர் இவரை வேருெருவருக்குத் திருமணம் செய்துவைத்ததாலேயே, இவர் அன்றிரவே தனக்கு விருப்பமான வாலிபருடன் வீட்டைவிட்டு ஓடியதாகவும் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது.

தான் அணிந்த நகைகளுடன் மணமகளான செல்வமலர், தன்னைவிட்டு ஓடிவிட்டதாக மணமகனுன மாணிக்கம் பொலிஸில்செய்துள்ள புகாரில்தெரிவித்துள்ளார்.

## 2 ஆயிரம் பேர்நியமனம்

கொழும்பு திங்கள்

இரண்டாயிரம் உதவி ஆங்கில ஆசிரியர்கள், அடுத்த மார்ச் மாதம் சகல பாடசாலைகளுக்கும் நியமிக்கப் படவிருக்கிருர்கள். இதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

ஆங்கிலக் கல்வித் தராதரம் குறைந்த பாடசாலைகளில் நியமிப்பதற்காகவே இந்த உதவி ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிருர்கள். இதற்கு இதுவரை 50,000 பேர் விண்ணப்பித்துள்ளார்கள்.

இவர்களில் 2000 பேர் மட்டும் தெரிந்தெடுக்கப்படுவார்கள் இவர்களுக்கான விசேஷ பயிற்சி இம்மாத முடிவுக்குள் ஆரம்பமாகும். மார்ச் மாதத்தில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

பட்டதாரி மாணவர்கள் எவரும் உதவி ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்படமாட்டார்கள்என சம்பந்தப்பட்ட அதிகாரிஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

(இச் செய்தி நேற்றைய பிந்திய பதிப்பில் வெளியானது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொடீஷியா — தென்னுபிரிக்கா

# நிறத் துவேஷத்தை எதிர்த்து லண்டனில் பெரும் ஆர்ப்பாட்டம்

## 'காமன்வெல்த்' சவப்பெட்டி தெருக்களில் ஊர்வலம்

### கைகலப்பில் 30 பேருக்கு காயம்

லண்டன், ஜனவரி 13

லண்டனில் நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் பொலிசார் உட்பட 30 பேர் காயமடைந்தார்கள். 31 பேர் கைதுசெய்யப்பட்டார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ரொடீஷியக் கொள்கையையும், குடிவரவுக் கொள்கையையும் எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

சுமார் 5 ஆயிரம் பேர் கறுப்பர்களும் வெள்ளையர்களும் லண்டன் ஹைபார்க்கிலிருந்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹரல்ட் வில்சனின் இல்லத்தை நோக்கி கோஷமிட்டவண்ணம் ஊர்வலமாகப் போனுர்கள். பிரிட்டனின் குடிவரவுக் கொள்கையையும் ரொடீஷியக் கொள்கையையும் கண்டித்து இவர்கள் கோஷமிட்டார்கள். தென்னுபிரிக்காவின் நிறத் திமிரை எதிர்த்தும் ரொடீஷியாவின் நிறக்கொள்கையை எதிர்த்தும் அவர்கள் கோஷமிட்டார்கள். 'காமன் வெல்த்' என்று குறிப்பிடப்பட்ட சவப்பெட்டியொன்றையும் ஆர்ப்பாட்டக்காரர் எடுத்துச் சென்றனர்.

## ரொடீஷிய இல்லத்தின் மீது திடீர்தாக்குதல்

ஆர்ப்பாட்ட ஊர்வலம் ரொடீஷிய அரசாங்க இல்லத்தின் வழியாக சென்ற பொழுது ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் திடீரென ரொடீஷிய இல்லத்தின் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தார்கள். கற்களையும் மண்கட்டிகளையும் அவர்கள் இல்லத்தின் மீது வீசினுர்கள். இல்லத்தின் யன்னல்களும் நொறுக்கப்பட்டன. இக்கட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களை தடுக்க முயற்சிசெய்த பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர் களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. இதில் பொலிசார் உட்பட 30 பேர் காயமடைந்தனர். 31 பேர் கைது செய்யப்பட்டனர்.

தென்னுபிரிக்க தூதரகத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர் தாக்குதல் நடத்தினுர்கள்.

## காமன்வெல்த் சட்ட மாணவர் ஊர்வலம்

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம் பெறுவதற்கு சுமார் 18 மணி நேரத்துக்கு முன்னர் ரொடீஷியத் தூதரகத்தின் கூரையின் மீது இருவர் ஏறி அங்கு பறந்துகொண்டிருந்த ரொடீஷியக் கொடியை இறக்கி விட்டனர். அதற்குப் பதிலாக பிரிட்டிஷ் கொடியை அவர்கள் பறக்கவிட்டனர்.

கூரையின்மீது சுமார் 11 மணிநேரம் அவர்கள் இருந்தனர். அந்த இருவரையும் பொலிசார் அப்புறப் படுத்தினுர்கள். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட மாட்டாதென்றும் பொலிசார் அறிவித்தனர்.

ஊர்வலத்தில் சென்றவர்களில் சிலர் ஒரு மகஜரை பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனிடம் கையளித்தனர்.

பிரிட்டனில்

## காந்தி முத்திரை

லண்டன், ஜன.13

மகாத்மா காந்தியின் உருவத்தைக் கொண்ட முத்திரை ஒன்றை பிரிட்டன் வெளியிட விருக்கின்றது. காந்தி நூற்ருண்டை யொட்டி இந்த முத்திரை வெளியிடப்படுகின்றது. பிரிட்டனைத் தவிர்ந்த வெளிநாட்டு அரசியல் ஞானி ஒருவரைக் கௌரவிக்கும் வகையில் பிரிட்டன் முத்திரை வெளியிடுவது இதுவே முதல் தடவை.

## பிரசாரம்

அல்லப்பிட்டி, திங்கள்

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் அரசியல் கட்சிக்கு தீவுப்பகுதியில் ஆதரவு தேடும் பொருட்டு ஊர்காவற்றுறை எம். பி. திரு. நவரத்தினம் முயற்சிஎடுத்து வருகிருர். இப்பகுதியில் பல பிரசாரக் கூட்டங்களை நடாத்த அவர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

## கோரிக்கை

அல்லைப்பிட்டி, திங்கள்

தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கஷ்டத்தை நீக்குவதற்கு மத்திய இடமாகிய வேலணை வங்காளவடியில் இ. போ. ச. பஸ் வண்டிகள் சிறிது நேரம் தங்கிச் செல்ல வேண்டும் என இப்பகுதிமக்கள் கோருகின்றனர்.

## கூரையில் ஏறி கொடியை இறக்கினர்

பிரிட்டனில் சட்டம் பயிலும் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 சட்டமாணவர்கள் நேற்று லண்டன் தெருக்களில் ஊர்வலமாகச் சென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். பிரிட்டனில் காமன்வெல்த் சட்ட மாணவர்கள் அனுபவிக்கும் வசதியீனங்கள் பற்றி இவர்கள் தமது மகஜரில் குறிப்பிட்டிருக்கிருர்கள் என்று தெரிகின்றது.

பாரிஸ் அமைதிப் பேச்சு

# அமெரிக்க யோசனை மீண்டும் நிராகரிப்பு

பாரிஸ், ஜன. 13

அமெரிக்க அதிகாரிகள் வியட்ஞம் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காகத் தெரிவித்த யோசனைகளை வடவியட்ஞம் மீண்டும் நிராகரித்துவிட்டது.

வியட்ஞம் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான மேசை அமைப்பு பற்றியும், யார் யார் முதலில் பேசுவது என்பது பற்றியும் அமெரிக்க இரண்டு புதிய யோசனைகளைத் தெரிவித்திருந்தது. இந்த இரண்டு யோசனைகளையும் வடவியட்ஞம் நிராகரித்துள்ளது.

மேசையில் கம்பளி நாடாக்களைக்கொண்டு ஒவ்வொரு பகுதியினரையும் வெவ்வேருகக் காட்டலாம் என்றும் பேச்சுக்கள் ஆரம்பமான பிறகு வடவியட்ஞம் பிரதிநிதியோ தேசிய விடுதலை முன்னணியோ தொடர்பாக முதலில் பேசுவதற்கு அனுமதிக்கலாம் என்றும் அமெரிக்கா கடைசியாக ஒரு யோசனை தெரிவித்ததாகத் தெரிகின்றது. இதனை வடவியட்ஞம் நிராகரித்துள்ளது.

## சரவணையில் இன்று ஆரம்பமாகும் தமிழ் விழா

### 3 நாள் தொடர்ந்து நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்.

சரவணை சேவாமன்றத்தினர் நடாத்தும் தமிழ்விழா சரவணை நாகேஸ்வரி மண்டபத்தில் அமைந்த நாவலர் அரங்கில் இன்றுகோலாகலமாக ஆரம்பமாகிறது. விழாவில் கலந்து கொள்ளும் பிரமுகர்கள் மாலை 5-30 மணிக்கு சரவணை நாவலர் விளையாட்டு மைதானச் சந்தியிலிருந்து ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இன்றுமாலை 6 மணிக்கு நாவலர் அரங்கில் ஆரம்பமாகும் விழாவுக்கு யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி.முருகேசம்பிள்ளை தலைமைதாங்குகிருர். பிரதம விருந்தினராக யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய முன்னுள் அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் கலந்து கொள்ளும் இவ்விழாவில் சேவாமன்றத்தினரின் கொடியை திரு. இ.வி. தளையசிங்கம் ஏற்றி வைப்பார்.

ஈழத்துச்சிவானந்தன், இரசிகமணி கனக செந்திநாதன், திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. ஆகியோரின் பேச்சும் திருநெல்வேலி 'கலைக்கோவில்' கலைஞர்வேல் ஆனந்தன் குழுவினரின் நடன நிகழ்ச்சிகளும், கவிஞர் பா. சத்திய சிலனின் கவிதைத் தொகுதி அரங்கேறற்மும் இன்று நடைறும்.

### நாளைய நிகழ்ச்சிகள்

வே ் தஞர் அரங்கில் இன்று நடைபெறும் விழாவுக்கு முன்னுள் இலங்கை சிவில் சேவையாளர் திரு. மு. வைரமுத்து ஜே. பி, பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிருர். பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி. தலைமையில் விழாதலைமையில் விழாநடைபெறும். [illegible] டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கவிஞர் காசி ஆனந்தன், திரு. வி. பொன்னம்பலம், திரு. இரா. சிவலிங்கம் ஆகியோரின் பேச்சும் இசை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும்.

### கடைசி நாள் நிகழ்ச்சிகள்(வியா.)

இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இன்றைய விழா தில்லைநாதப்புலவர் அரங்கில் நடைபெறும். காணிநீர்ப்பாசன மின்சார இலாகாநிரந்தரக் காரியதரிசி திரு. ம.ஸ்ரீ காந்தா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், வித்துவான் வீ. சி. கந்தையா, உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் திரு. செ, இராசதுரை எம். பி. ஆகியோரின் பேச்சும், 'மஹாகவி' தலைமையில் கவியரங்கமும், நடிகவேள் லடீஸ் வீரமணி கோஷ்டியினரின் வில்லுப்பாட்டும் இடம் பெறும்.

மூன்று தினங்களுக்கும் இரவு 12மணிக்கு விழா மண்டபத்திலிருந்து யாழ்ப்பாணம், புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கு பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக சேவாமன்ற இணைக் காரியதரிசிகள் திருவாளர்கள் க. துளசிகாமணி, செ. சிவஞானசம்பந்தன் ஆகியோர் தெரிவித்தனர்.

## தொல்லை

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத் தீவுப்பட்டின சபை எல்லைக்குள் கட்டாக்காலிநாய்கள் தொகை அதிகரித்துள்ளது. அநேகர் நாய்களால் கடிபட்டு ஆஸ்பத்திரியில்தினமும் சென்று ஊசி மருந்து போடுகிருர்கள்.

அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்
அரைச்சலார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாடிக்கைகாரர்கள, அன்பர்கள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது அன்புகலந்த

**பொங்கல் வாழ்த்துக்கள்!**

கடந்த 35 ஆண்டுகளாக எமது ஸ்தாபனத்தை ஆதரித்தமைக்கும் எமது கைத்தொழிலுக்கு ஊக்கமளித்தமைக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

நூற்றுக் கணக்கானவர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கும் எமது ஸ்தாபனத்தை வருங்காலத்திலும் ஆதரவளிக்கு வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி**

(பிரபல மருந்துச்சரக்கு, வாசனுதிகள் விற்பனையாளர்கள்)

53, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.
போன்: 541
Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்",
160, செட்டியார் தெரு,
கொழும்பு—11.

# உழவன் அன்பு

ஆதிகாலமனிதன் காட்டுமிராண்டியாய் மிருகங்களை வேட்டையாடி ஓரிடத்தில் நிலைத்திராமல் அலைந்து திரிவதை விடுத்து நாடுதிருத்தி பயிரிட்டு வேளாண்மை செய்யும் வழக்கத்தை மேற்கொண்டபோது அறுவடையின் முடிவில் தான் பாடுபட்டு வளர்த்தெடுத்த பயிர்தானியக் குலைகளுடன் பொலிவுறுவதைக் கண்டு அகமகிழ்ந்தவனுய் தனது முயற்சியில் உதவியாக நின்றவர்களுக்கு நன்றி செலுத்தும் முகமாக புதுப்பானையில் புதுப்புனலும் புதுநெல்லுமிட்டு பசும்பால் கூட்டி பொங்கல்செய்து பழம் கரும்பு முதலியவற்றுடன்படையல் செய்தான் அவனுடைய உள்ளத்தில் பொங்கிய உவகை பானையிலும் பிரதிபலித்தது.

அக்காலத்தில் அறுவடை செய்த வயற் பரப்பிலேயே பொங்கலும் நடந்தது. பின்னர் வீதிகள் மருங்கிலும் சந்திகளிலும் கோயில்களிலும்பொங்கினுர்கள். இன்று வயலில் பொங்கும் வழக்கம் பல இடங்களில் மறைந்து விட்டது. இதற்கு காரணம் இருக்கிறது.

முன்பெல்லாம் தைமாதம் முதல் திகதியே நெற்கதிர்கள் முற்றிப் பழுத்து அறுவடைக்கு தயாராகி விடுகின்றன. எனவே கொய்த கதிரை உடனேயே அடித்து நெல்லாக்கி அறுவடை நடந்த வயலின் களத்து மேட்டிலேயே பொங்கிப் படைக்கும் வாய்ப்பு இருந்தது. பின்னர் காலம் செல்லச் செல்ல பருவ காலங்களின் பெயர்ச்சியால் கதிர் முற்றுவதற்கு கால தாமதமாகிற்று. அறுவடைகாலம் பின்னடைந்தது. இதனுல் உத்தராயண ஆரம்ப காலமாகிய தை முதல் தினத்... அறுவடை செய்... முடியாமற் போய்விட்... இன்று அநேகமாக ம... மாதத்திலேயே பல இ... களில் அறுவடை பூ... யாகிறது ஆகையினுல்... தைப்பொங்கலை வீடு... தோறும் கொண்ட... வேண்டிஏற்பட்டது.

தைமாதம் முதல் திக... அறுவடை செய்ய மு... மாயிருந்தால் உழவ... தங்கள் புது நெல்லிலே... பொங்குவார்கள்.

— வி. என். பி. —

## நாளைவரும் விழா நாளறியார்!

--நிலவின்தாஸன்--

பொங்கலில் இன்பம் பூரிக்குமுள்ளம்
  புதுநடை போடும் இளவலிடம்
அங்கொரு மங்கை விட்டவன் போன
  வழிதனில் நயனம் விடுத்திருந்தாள்
எங்கவர் போனுர் நாளைக்குப் பொங்கல்
  ஏனவர் காணேம் என அருகில்
பங்கெடுத்தா ளவள் தோழியை நோக்கி
  பாவையள் கேள்விகள் தொடுத்திருந்தாள்.

"நாளைக்குத் தானே பொங்கல் நீயவரை
  இன்றைக்குத் தேடும் மாயமென்ன
காலையில் வருவார் அரிசியுங் கொண்டு
  கவல்வதை விடுப்பாய்" என அவளின்
தோழியள் சொல்வாள் தலைவியோ கேட்காள்
  சுந்தரத் தார்க்கிடர் நேர்ந்ததென்று
வீழ்ந்தழுதாள் சில நொடிகழிய வொரு
  விழுமிய சேதி அங்கு வரும்.

சேதியிலே யெதுஉள்ள தெனத் தோழி
  சிந்தை மலர்ந்ததை வாசித்தனள்
பாதியிலே யவள் சிரித்தனளே உண்மை
  பார்க்கையில் சிரிப்பது வரும் கதைதான்
"காதலியே எந்தன் ஆருயிரே அஞ்சல்
  களனியில் நின்றிவன் எழுதுகிறுன்
ஏதுதினம் அதில் பொங்கல் வருமென
  என்னுயிரே சொல்க" என இருக்கும்.

" பொங்கல் வருந்தினம் நாளைக்குத்தானென
  பொன்னி யேயுன்னவர் அறியவில்லை
இங்கதனுலவர் சேதிவிட்டார் அதில்
  என்றைக்குத் தானென்று கேட்டுமுள்ளார்
அங்குன தன்பரோர் வனத்திடை வயல்செய்து
  அரும்பணி செய்கிறுர் ஈழத்துக்கே
நங்காய்! உனதவர் நாட்டின் கவனத்தால்
  நாளை வரும்விழா நாளறியார்."

தோழி மொழிந்தனள் மேற்சொன்ன வார்த்தைகள்
  சுந்தரத் தானுமவ் வேளை வந்து
வாயிற் கதவினைத் தட்டி நுழைந்தனன்
  வந்தெதிர் கொண்டனன் பொன்னி நங்கை
"தேசத் துயர்தனைத் தீர்க்கும் உழைப்பினுல்
  சிந்தைதனில் பொங்கல் நாள் மறந்தேன்
மாசில் அரிவையே மாணிக்கமே என்னை
  மன்னிக்க!" என்றவன் கூறி நின்றுன்.

## சபையில் நடந்...

(1-ம் பக்கத் தொடர்ச்...

### சமசமாஜக் கட்சியின...

மேயர் நாகராசா... உதவி மேயர் துரைராச... கமும் முன்னுள் சமசம... கட்சிஉறுப்பினர்கள். பே... தெரிவில் போட்டியி... ஏ. விஸ்வநாதன் சம... ஜக்கட்சி உறுப்பினர்.

### மேயர் உடையில்

மேயராகத் தெரிவுசெ... யப்பட்ட நாகரா... சபையை ஒத்திவை... விட்டு மேயருக்கான... கியை அணிந்த பின் ச... க்கு வந்தார். மேயருக்க... சங்கிலியை திரு. ஏ. ... ராசா மே...ின் கழு... அணிந்தா... இது மேய... அறையில் நடந்தது.

### அங்குரார்ப்பண...

யாழ்ப்பாணம், ெ...

இன்று மாலை யாழ். ... மேயர் திரு. சி. நாகரா... தலைமையில் யாழ். இளை... கழகத்தின் அங்குரா... பணக்கூட்டம் யாழ். நீரா... யடி விக்னேஸ்வர வித்தி... லய மண்டபத்தில் ந... பெறவிருக்கிறது.

## ஜி. ஜி....

(1-ம் பக்கத் தொடர்ச்...

திரு. எஸ். கதிரவேற்பிள்... அரசியலில் மாறுப... கருத்துக் கொண்டிரு... போதிலும் நகர நிர்வா... சீராக அமைய, திரு.பொ... னம்பலத்...ன் ெ... மாகப் பழகினுர். இத... இரு கட்சிகளும் வெ... பெற்றுள்ளன. என் வெ... றிக்கு உறுதுணையாகவிரு... மாஜி மேயர் திரு. து... ராசாவுக்கு நன்றி செ... தக் கடமைப்பட்டிருக்... றேன். அவரின் பெருந்... மையால் நான் இப்பதவி... வர முடிந்தது. பொது... கள், இரு கட்சியின... செய்த முடிவை ஏற்... கொள்வார்களென ந... நம்புகிறேன். இச்சபை... கடமையாற்றும் ஊழி... கள் கவனக்குறைவாக ... லுக்கு இடங்கொடுக்... முறையில் கடமையா... வீண்பொழுது போக்கி... கடுமையாக இருப்பே... சகல மக்களுக்கும் எவ்... வித்தியாசமும் காட்ட... பாகுபாடின்றி, கண்ணி... மான முறையில் சிறந்த ... வாகத்திற்காகக் கட... யாற்றுவேன்."

அது நல்லது
அது இதமானது




அதுவே
ஸ்போர்ட்ஸ்மன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

பொங்கல் வாழ்த்துக்க...

தரத்தில் சிறப்புமிக்க மில்க்வைற் சோப்பை...

★ மில்க்வைற் சோப்

★ மில்க்வைற் மெடிக்கேற்றட் சோப்

"மில்க்வைற்" உங்கள் சகல சலவை வேலைகளையும் தி...
"மில்க்வைற்" என்பது ஓர் நம்பிக்கையுள்ள வியாபார...

மில்க்வைற் சோப் தொழிற்சா...

தந்தி: "மில்க்வைற்"   :—:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புக்காணிக்கை

த முதல் தினத்தில்
டை செய்வது
மற் போய்விட்டது.
அநேகமாக மாசி
திலேயே பல இடங்
அறுவடை பூர்த்தி
து ஆகையினால்தான்
பாங்கலை வீடுகள்
ம் கொண்டாட
ஏற்பட்டது.
ாதம் முதல் திகதியே
டை செய்ய முடியு
ந்தால் உழவர்கள்
புது நெல்லிலேயே
குவார்கள். இது

முடியாத காரணத்தால் இங்கு பலர் பழைய நெல் அரிசியிலேயே பொங்கல் செய்கிறார்கள்'

வயல் வெளியில் பொங்கல் கொண்டாடிய ஒருழவன் தனது பயிரை ஈன்றெடுத்த பூமாதேவிக்கும் அவளுக்கு அனுசரணையாக போகத்துக்குப் போகம் மழையையும் வெய்யிலையும் தந்துதவிய சூரிய பகவானுக்கும் தனது நன்றிக் காணிக்கையை செத்துகிறான். தன் நன்றியறிதலையும் உள்ளத்தில் பொங்கி வடும் அன்புப் பெருக்கையும் அவன் வேறு எவ்விதம் தெரிவிக்க முடியும்? இது மட்டோடு அவன் நிற்கவில்லை. வயலை உழுது பண்படுத்துவதற்கும் அதற்குப் பசளையிடுவதற்கும் அறுவடை செய்த நெல்லையும் வைக்கோலையும் வீ கொண்டுவந்து சேர்ப்பதற்கும் அவனுக்கு நாளிலும் பொழுதிலும் உதவிசெய்த வாயில்லா பிராணிக்கும் அடுத்த நாள் நன்றி தெரிவித்து மாட்டுப் பொங்கல் செய்கிறான். மாடு புற்கை தின்னாது என்பதை அவன் அறிவான். ஆயினும் அவன் தான் செய்யவேண்டிய கடமையைச் செய்கிறான்.

அது அவனுடைய அன்புக் காணிக்கை.

லண்டன், ஜன. 12

லண்டனிலுள்ள றொடீஷிய மாளிகையில் இன்று இருவர் றொடீஷியக் கொடியை ஏற்றிவைத்தனர்.

## யில் நடந்...

பக்கத் தொடர்ச்சி)

### மாஜக் கட்சியினர்

ர் நாகராசாவும்,
மேயர் துரைராசசிங்
முன்னாள் சமசமாஜ
றுப்பினர்கள். மேயர்
ல் போட்டியிட்ட
வநந்தன் சமசமா
சி உறுப்பினர்.

### உடையில்

ராகத் தெரிவுசெய்
ட நாகராசா
ய ஒத்திவைத்து
மேயடுக்கான அங்
அணிந்த பின் சபை
தார். மேயடுக்கான
யை திரு. ஏ. நட
மே..ின் கழு..ில்
தா.. இது மே..ின்
ல் நடந்தது.

## தரார்ப்பணம்

ாழ்ப்பாணம், செவ்.
ு மாலை யாழ். நகர
திரு. சி. நாகராசா
மயில் யாழ். இளைஞர்
தின் அங்குரார்ப்
ட்டம் யாழ். நீராவி
க்னேஸ்வர வித்தியா
ண்டபத்தில் நடை
டுக்கிறது.

## ழி....

பக்கத் தொடர்ச்சி)
ஸ். கதிரவேற்பிள்ளை
லில் மாறுபட்ட
க் கொண்டிருந்த
லும் நகர நிர்வாகம்
அமைய, திரு. பொன்
த்..ன் ..க்க
பழனார். இதனால்
கட்சிகளும் வெற்றி
ள்ளன. என் வெற்
உறுதுணையாகவிருந்த
மேயர் திரு. துரை
க்கு நன்றி செலுத்
டமைப்பட்டிருக்கின்
அவரின் பெருந்தன்
ல் நான் இப்பதவிக்கு
டிந்தது. பொதுமக்
இரு கட்சியினரும்
முடிவை ஏற்றுக்
வார்களென நான்
றேன். இச்சபையில்
யாற்றும் ஊழியர்
வனக்குறைவாக ஊழ
இடங்கொடுக்கும்
யில் கடமையாற்றி,
பாழுது போக்கினால்
யாக இருப்பேன்.
மக்களுக்கும் எவ்வித
பாசமும் காட்டாது
ாடின்றி, கண்ணிய
முறையில் சிறந்த நிர்
திற்காகக் கடமை
வேன்.''

## மங்கலப் பொங்கலும் வந்ததம்மா!

மங்கலப் பொங்கலும் வந்ததம்மா — எங்கள்
வாழ்வு சிறந்தே மலர்ந்ததம்மா
திங்களில் தைமுதற் சூரியனை — நாம்
சேர்ந்து வணங்கும் நாளிதம்மா

காலை யெழுந்துநாம் நீராடி — முற்றம்
கரைத்தநீர் சாண மதால் மெழுகி
மேலுயர் மாவிலை தோரணங்கள் — தொங்க
வித வித மாலைகள் தூக்கிடு வோம்.

குத்து விளக்குக் கொளுத்திவைப் - போம்பல
கோலங்கள் வண்ணம தாயமைப் போம்
பத்திர புஷ்ப நிறைகுடத்தைக் - கீழே
பச்சரி சியிட்டுப் பரப்பிவைப் போம்
பிள்ளையார் சாணத்திற் பிடித்துவைத் – தேமுன்
பெரிய தலைவாழை இலையினி லே
தெள்ளிதாய்ப் பழம்பாக்கு வெற்றிலையும் — முன்
தேங்காய் உடைத்தே தொடக்கிவைப் போம்

புத்தம் புதிய பானையிலே — மஞ்சள்
பொலிவு இஞ்சி இலையுஞ் சுற்றி
பத்திர மான புதியடுப்பில் — பசும்
பால் பெய்து பொங்கலை ஏற்றிவைப்போம்

சூரிய தோத்திரஞ் சொல்லிடு வோம் — எங்கும்
சுற்றியே பொங்கல் நீர் தெளித்திடு வோம்
சோதிக் கதிரோனை நோக்கி நின்று — நாம்
தூமல ரிட்டு வணங்கிடு வோம்.

சேந்தன்

## பாடியே வந்திடுவாய்!

குங்கும வண்ணச் செவ்வாய்
கொடிமலர் கன்னி மார்கள்
கொங்கைகள் குலுங்கி யார்ப்பக்
கொடியிடை நொந்து வாடத்
தங்களின் முற்ற மெல்லாம்
தரித்துமே குப்பை கூட்டி
மங்கலக் கோல மெங்கும்
மண்ணின்மே லிடுகின் றாரே!

ஓங்கிடும் வெடியி னோசை
ஓடிடுஞ் சிறுவர் கூட்டம்
தாங்கிய புதிய ஆடை
தாரணி வியக்கும் வண்ணம்
மாங்குயில் மகிழ்ந்து பாட
மங்கல இசைகள் பொங்க
பாங்குயர் பொங்கல் நீயும்
பாடியே வந்திடு வாய்.

—கீழ்கரவை மு. இரத்தினம்

பல்கலைக் கழக

## மாணவர் தொகை குறைக்கப்படும்

பம்பலப்பிட்டி, திங்கள்

இந்த வருடத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு எடுக்கப்படும் மாணவர்களின் தொகை குறைக்கப்படவிருக்கிறது. சர்வகலாசாலைகளில் எழுந்துள்ள இடமின்மையைச் சமாளிப்பதற்காகவும் உயர் கல்வியின் தரத்தை உயர்த்தவும் தேசியஉயர்கல்விச்சபைஇவ்வாறு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் இடம் கிடைக்காமல் அவதியுறுபவர்களுக்கு தபால் மூலம் பல்கலைக்கழக கல்வி வழங்க சபை ஆலோசித்து வருவதாகவும் தெரிகிறது.

—

சென்னை, ஜன, 12

அகில இந்திய வானொலி ஒலிபரப்பும் ஆங்கிலச் செய்தி அறிக்கை நேரத்தை முன்போலவேமாற்றியமைக்கும்படி தமிழக அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் கோரவிருக்கிறது. முன்னர் காலை 8 மணிக்கு ஒலிபரப்பப்பட்ட செய்தி அறிக்கை இப்போது காலை 8-15 மணிக்கு ஒலிபரப்பப்படுகிறது.

## நாளை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செவ்.

'அன்னை வெளியீட்டகம்' வெளியீடான 'மஹாகவியின் கண்மணியாள் காதை' என்னும் வில்லுப்பாட்டு நூல் வெளியீடு நாளை மாலை யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும். இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமையில் இவ்விழா நடைபெறும்.


எமது வாடிக்கைக்காரர்கள்
மற்றும்
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

ஆ. ச. சங்கரப்பிள்ளை
அன் பிறதர்ஸ்
(பிரபல பலசரக்கு வியாபாரிகள்)
166, ஆஸ்பத்திரி வீதி :-: யாழ்ப்பாணம்.
போன்: 308

இவ் மங்களகரமான திருநாளில்
பீடி அபிமானிகளுக்கு எங்கள்
பொங்கல் வாழ்த்தும் நற்செய்தியும்!
நீங்கள் இதுவரை காலம் எதிர்பார்த்ததும்
இணையற்றதுமான
புகழ்மணம் கமழும்

ரதி பீடிகள்

இதோ வந்துவிட்டன
இன்றே வாங்கிப் பாவித்துப்பயனடையுங்கள்
சகல
பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜங்களிலும்
சில்லறைக்கு
பூபாலசிங்கம் அன சன்ஸ்
நம். 4, ஆஸ்பத்திரி வீதியிலும் கிடைக்கும்.
உற்பத்தியாளர்:
யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை
ஐக்கிய வியாபாரச் சங்கம்
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 543

அருள் பொங்க! பொருள் பொங்க!!
இந்நாள் போல் எந்நாளும்
எல்லோரும் இன்புற்றிருக்க!!!

தம்பி அன் கோ
வண்ணார்பண்ணையில்

கீழ்க்குறித்தபடி வட்டி கொடுக்கப்படும்

நிரந்தர சேமிப்புக்கு (Fixed Deposits)

| | | | |
|---|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் | 8 சத வீதம் |
| 2 ” | — | ” | 9 ” |
| 3 ” | — | ” | 10 ” |

ஒவ்வொரு வருடமும் வட்டி கொடுக்கப்படும்

தவணை சேமிப்புக்கு (Call Deposits)

| | | | |
|---|---|---|---|
| 30 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு | — | வருடம் | 8 சத வீதம் |
| 7 ” ” ” | — | ” | 7 ” |
| 3 ” ” ” | — | ” | 6 ” |

தினசரி சேமிப்புக்கு (Savings Deposits)
மாதாந்தம் ஆகக் குறைந்த தொகைக்கு
வருடம் — 8 சத வீதம் வட்டி
([illegible]ங்களுக்கு வருடம் — 10 சத வீதம்)

துக்கள்
மகிழ்வும் செல்வமும் பொங்கும் பரிசுத்த
பொங்கல் திருநாளாகிய இன்று இறைவன்
எல்லோரையும் ஆசிர்வதிப்பாராக!
ற் சோப்பையே பாவித்து பலனடையுங்கள்
★ மில்க்வைற் பார்சோப்
றட் சோப் ★ மில்க்வைற் சலவைப் பவுடர்
வேலைகளையும் திருப்திகரமாகப் பூர்த்திசெய்கின்றது
யுள்ள வியாபாரச் சின்னம்
றிற்சாலை - யாழ்ப்பாணம்
::—::
தொலைபேசி: 7233


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் இதழ் விற்பனையாகின்றது!

இதுவரையும் வெளிவராத பிரமாண்டமான வர்ணசினிமா மாதஇதழ்
திரைவாணி
யாழ்ப்பாண விற்பனையாளர்: அன்பு புத்தகசாலை 27 D, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள் !



கே.என்.எம்
மீரன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி (போன்: 585) யாழ்ப்பாணம்.

காமதேனு கோப்பித்தூள்
பாவனையாளர்களுக்கும்
வர்த்தகப் பெருமக்களுக்கும் மற்றும்
அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
தயாரிப்பாளர்கள்:
பரீதா ஸ்ரோர்ஸ்
பழைய சோனகத்தெரு ::-:: கொழும்பு-13
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
யாழ்.மோர்கன்டைல்ஸ் ஏஜென்ஸீஸ்
நல்லூர் மார்க்கற் -- யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான
V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள்
அனைவருக்கும் தமது உளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.
V.K. இராசரத்தினம்
பிரபல றேடியோ
விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்.
95, ஸ்ரான்லி றேட் :: :: யாழ்ப்பாணம்

## கோவையில் காலராவுக்கு 8 பேர் பலி

கோவை, ஜன. 13

கோயம்புத்தூரில் காலரா நோய்க்கு இவ்வாரத்தில் மட்டும் எட்டுப் பேர் பலியாயிருக்கிறார்கள். நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தடுப்பு ஊசி ஏற்றப்பட்டு வருகிறது. ஆஸ்பத்திரியில் காலரா நோயாளருக்கென விசேஷ வார்ட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## எம். பி. அவசர தந்தி

வல்வெட்டித்துறை, திங்.

பருத்தித்துறை மீன்பிடி கூட்டுத்தாபன கிளைக் கந்தோரில் தட்டுப்பாடு நிலவும் மீன்பிடி உபகரணங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் மீன்பிடி கூட்டுத்தாபனத் தலைவரை அவசர தந்தி மூலம் கேட்டுள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 14—1 69**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-35 நாதஸ்வரம்—என். கே. பத்மநாதன், 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 கவி அரங்கு, 9-15 நாதஸ்வரம் — என். கே. பத்மநாதன், 10-00 பொங்கல் விழா, 10-30 ஆமந்திகை — தயாரிப்பு — விமல் சொக்கநாதன், 11-15 தொழிலாளர்வேளை.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ அன் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பாட்டு, 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பொங்கல்விழா.

# விவசாயப்படை வீரர்கள் விளையாட்டு போட்டி முடிவுகள்

அளவெட்டி, திங்கள்

விசுவமடு விவசாயப்படை வீரர்களின் வருடாந்த விளையாட்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ் விளையாட்டுவிழாவுக்கு கிளிநொச்சிக் காரியாதிகாரி திரு. திருலோகநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இவ் விளையாட்டு விழா சிகப்பு பச்சை நீலம் ஆகிய இல்லங்களுக்கிடையே நடத்தப்பட்டது.

இவ் விளையாட்டுப் போட்டியின் முடிவுகள் வருமாறு:-

15 மைல் மரதன்ஓட்டம்: ஜீ. அன்ரன் (பச்சை இல்லம்) ப. விபுலானந்தன் (பச்சை இல்லம்) ஆர். சிவலிங்கம் சிகப்பு இல்லம்

கரபந்தாட்டம்: நீல இல்லம்: சிகப்பு இல்லம்.

1500 யார்ஓட்டம்: என். இராசலிங்கம் (நீல இல்லம்) கே. இலட்சுமிகாந்தன் (சிகப்பு இல்லம்) ஜீ. அன்ரன் (பச்சைஇல்லம்) 800 யார் ஓட்டம்: எம். இரத்தினவடிவேல் (நீலஇல்லம்) எம்.சின்னையா, (பச்சை இல்லம்) ஏ. திருச்செல்வநாயகம்(பச்சை இல்லம்)

குண்டெறிதல்: எம். இலட்சுமிகாந்தன் (சிகப்பு இல்லம்) எஸ். கதிரமலை (பச்சை இல்லம் எஸ். பாலச்சந்திரம் (நீல இல்லம்

நீளம் பாய்தல்: எஸ். சுப்பிரமணியம் [நீல இல்லம்] கே. சண்முகவேலாயுதம் [நீல இல்லம்] எஸ். சுந்தரம் [சிகப்பு இல்லம்]

தலையணைச்சண்டை; எஸ். சுந்தரம் [சிகப்பு இல்லம்]

கிறிஸ்போல்:-ஆர். கந்தசாமி, உயரம் பாய்தல்:- எஸ். சுந்தரம், (சிகப்பு இல்லம்), எஸ். வீரப்பன் (நீல இல்லம்). எம். தங்கராசா (சிகப்பு இல்லம்( கயிறிழுத்தல்:- பச்சைஇல்லம், சிகப்புஇல்லம், நீலஇல்லம்.

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், செவ்.

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினர் பொங்கல் விழாவை இன்று கொண்டாடுகின்றனர். அங்கத்தவர்களுக்கிடையிலான அதிர்ஷ்ட லாபச்சீட்டுக்கு இன்று மாலை 5 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கின்றனர்.

0 0 0

அளவெட்டி, திங்கள்

வலி வடக்குக் காரியாதிகாரி திரு. பி.எல். பற்றிக்ஸ் தலைமையில் அம்பனை வைரவர் கோவில் முன்றலில் அம்பனைக் கலைப்பெரு மன்றம் பொங்கல் விழாவை இன்று கொண்டாடுகிறது.

மஹாகவி தலைமையில் நடைபெறும் கவியரங்கில் வி. கந்தவனம் எம். ஏ. நுஃமான், இ. நாகராஜன், ஆசிச்செல்வன், அரியாலையூர் ஐயாத்துரை, சபாஜெயராசா ஆகியோர் கலந்து கொள்வர். இயல், இசை கதம்பநிகழ்ச்சிகளும் இடம் பெறும்

விழாவில் மயிலை சிவசண்முகதாசன், க: உமா மகேஸ்வரன், புலவர் ம, பார்வதிநாதசிவம், வி. பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

## 8-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். சைவசமய அபிவிருத்திக்கழகம் வருகிற 16-ந் திகதி தனது எட்டாவது ஆண்டுவிழாவினைக் கொண்டாடுகிறது. நாயன்மார்க்கட்டு மகேசுவரி வித்தியாசாலையில் நடைபெறும் இவ்விழாவில் வேல் ஆனந்தனின் கலைக்கோயில் நடன மாணவியரின் நடனங்கள், 'நாவலர் நாவலரான கதை' என்ற இசைச்சித்திரம், நாடகம் போன்றவை இடம் பெறும்

தீவுப்பகுதி

## விளையாட்டுபோட்டி முடிவடைகிறது

அல்லைப்பிட்டி. திங்கள்

விளையாட்டமைச்சின் ஆதரவில் தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் தீவுப்பகுதி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இம்மாதம் 18-ந் திகதி முடிவடையும். அன்று மாலை வெற்றிபெறும் விளையாட்டுக்கழகங்களுக்கு வெற்றிக் கேடயங்களும் பரிசுகளும் வழங்கப்படும்.

## அமைச்சர் பார்வையிட்டார்

காலி, திங்கள்

பூசா குதிரைப் பந்தயத் திடலில் கைத்தொழில் பேட்டை நிறுவுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தை கைத்தொழில் கடற்றொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன அண்மையில் பார்வையிட்டார்.

இங்கு பல்வேறு வகைக் கைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு இடவசதிகள் அளிக்கப்படும் என்றும் ஆரம்ப வேலைகள் பூர்த்தியானதும் 100 கைத்தொழிலாளர்கள் அங்கு தொழில் புரிய அமர்த்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. காலி மாவட்ட ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் காலி மாவட்ட தொகுதிகளில் இருந்தே இந்தக் கைத்தொழிலாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கைத்தொழில் அமைச்சர் ஜின்தோட்டையிலுள்ள மரகூழ் தயாரிக்கும் தொழிற்சாலையையும் பார்வையிட்டு இத்தொழிற்சாலை சென்ற வருடம் நல்ல லாபம் ஈட்டியுள்ளதென்றும் மேலும் அத்தொழிற்சாலை விஸ்தரிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

றுகுணு சிமெந்து தொழிற்சாலையையும்மாகலையிலுள்ள கடற்றொழிலையும் மந்திரி கூட்டுத்தாபனங்களின் தலைவர்களோடும் அமைச்சின் அதிகாரிகளோடும் சென்று பார்வையிட்டார்.

பொங்கல் வாழ்த்துக்கள்
எமது அபிமான வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அனைவருக்கும் எங்கள் உள்ளங்கனிந்த பொங்கல் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.
கேட்டு வாங்குங்கள்
சுத்தமான
காவடி மார்க்
கற்பூரம்




இலங்கையில் தயாரிக்கப்படும் "காவடி மார்க் "கற்பூரம் எரியும் போது தூய்மைமிக்க நறுமணத்தை நல்குவதோடு அதிகநேரம் நின்று எரியும் தன்மை உள்ளது. சுத்தமான விளைவு கற்பூரத்தினல் தயாரிக்கப்படும் காவடிமார்க் கற்பூரங்கள் தினசரி பூஜைக்கும் ஆலய வழிபாட்டிற்கும் மிகச் சிறந்ததாகும். மலிவான விலையில் எங்கும் கிடைப்பது "காவடிமார்க் கற்பூரம்"
தயாரிப்பாளர்கள்:—
M. மாணிக்கவாசகம் அன் கோ
கற்பூரத் தொழிற்சாலை - 221 ... கொழும்பு-15.
ஆபீஸ்:- 106-2/1 ... , கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**பாரத் ஸ்ருடியோ**

போன்: 252

கஸ்தூரியார் வீதி :: :: யாழ்ப்பாணம்.



**புகையிலையும் காய்கறியும் பயிரிடும் கமக்காரரே!**

**பொஸ்றின்**

அழுக்கணவனையும் மற்றெல்லாக் கிருமிப்பீடைகளையும் ஒழிக்கவல்லது.

உடனே செயலாற்றும் சக்தி வாய்ந்த இந்த ரசாயனப்பொருளை அறுவடைக்கு முதல்நாள் வரை தெளிக்கலாம்.




ஷெல ரசாயனப் பொருட்கள் பாவித்து அதிக உணவு பயிரிடுக

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனபபொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள் 'அலட்றகஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ் எக்ஸ்டரா', 'ஆாகொடீன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', 'ஷெல் களைப்புற்கொல்லி எம் 50', 'ஸ்டாம்' எப-34, 'நெமவின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே



எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

**றோயல் டிஸ்பென்ஸரி**

PHONE 397 JAFFNA



ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**ராணி**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - சரோஜாதேவி நடித்த

**என் தம்பி**



ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

மானிப்பாய்

**வெஸ்லி சினிமா**

தினசரி 6 30, 9-30

இன்று 2-30 மெற்னி

பிரீபோயா, போயா 2-30

ரவிச்சந்திரன், காஞ்சனா முத்துராமன், ராஜ்ஸ்ரீ நடித்த

**காதலிக்க நேரமில்லை**

(ஈஸ்மன் கலர்)



ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**மனோஹரா**

(யாழ்ப்பாணம்)

தினசரி:- 6-30-9-30

இன்று பிற்பகல் 2-30-க்கு விசேட காட்சி

ஜெமினி-எஸ். வி. சுப்பையா வனஜா-சுந்தரிபாய் சகஸ்ரநாமம்-லலிதா நடித்த

**வள்ளியின் செல்வன்**

கலரி 35 சதம்


## இசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், செவ். இலங்கை இசைச் சங்கத்தின் பொங்கல்விழா இசைக் கச்சேரி கல்லூரி வீதியிலுள்ள நீராவியடி நாவலர் மண்டபத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறும்

## வெடி கொளுத்தும் இடம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண நகரில் பொங்கல் தினத்தை முன்னிட்டு விற்கப்படும் வெடிகளைச் சிலர் பிரதான வீதிகளில் கொளுத்தி வேடிக்கை பார்ப்பதால் போக்குவரத்துச் செய்யும் பாதசாரிகள் பெரும் அபாயத்தில் சிக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாகச் சிறுவர்கள் இதனல் விபத்துகளுக்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.


ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

இணுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி 6-30, 9-30

இன்று 3-30 மெற்னி

எம். ஜி. ஆர். - விஜயா நடித்த

**விவசாயி**



ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

**வின்ஸர்**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நடித்த

**ரகசியப் பொலிஸ் 115**

(ஈஸ்ட்மென்ட் கலர்)



உலகில் பிரசித்திபெற்ற இடங்களில் படமாக்கி ஓடி வெற்றியீட்டி கொழும்பில் 23 வாரங்களுக்கு மேல் ஓடிக்கொண்டிருக்கும் அனேகரின் பாராட்டைப் பெற்ற மகத்தான ஹிந்தி வர்ணச்சித்திரம் யாழ். மக்களின் அன்பு பொங்க பொங்கல் விருந்தாக

**வெலிங்டன்** யாழ் நகர்

தினசரி 1-30, 6-00 9-30 மணி

இன்று காலை 9-45 மணிக்கு விசேஷ காட்சி



ராஜ்கபூர், வைஜயந்திமாலா ராஜேந்திரகுமார் நடித்த ராஜ்கபூரின்

**சங்கம்**

(ரெக்னிக் கலர்)

இசை: சங்கர் ஜெய் கிஷன்



கிங்ஸ்லி (கொழும்பு)

எம். ஜி. ஆர். — சாவித்திரி நடித்த

**பரிசு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970- வரை

## பஸ் இறக்குமதி இல்லை

பம்பலப்பிட்டி, திங்கள் இலங்கைபோக்குவரத்துச் சபை 1970-ம் ஆண்டு முடியும்வரை இரட்டைத்தட்டு பஸ்களை இறக்குமதிசெய்வதில்லையெனத் தீர்மானித்துள்ளது. இப்போதுபாவனையில் உள்ள 30 வருடங்கள் வரை பாவிக்கப்பட்ட பஸ்கள் பல பழுதடைந்துவிட்டன. இதன் உறுப்புக்களை உற்பத்திசெய்த இடங்களில் இருந்தே பெற வேண்டியிருப்பதினுலுமே இவ்வித முடிவை இ. போ. ச. எடுத்துள்ளது.

தற்போது சுமார் 65 இரட்டைத்தட்டு பஸ்கள் பழுதடைந்துள்ளன என்றும் இவைகள் யாவும் இம்மாத முடிவுக்குள் திருத்தப்படவுள்ளன என்றும் தெரிகிறது. வருகிற மாத முடிவில் திருத்தப்பட்ட இரட்டைத்தட்டு பஸ்கள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது, இதைவிட 570 புதிய பஸ்களும் இவ்வருடத்தில் இறக்குமதியாகும் என தெரிகிறது.

## வயிற்ருேட்டத்துக்கு 8 பேர் பலி

கோயம்புத்தூர், ஜன. 13 கோயம்புத்தூரில் வயிற்ருேட்ட நோய்க்கு 8 பேர் பலியாகியுள்ளனர். இங்கு வயிற்ருேட்ட நோய் பரவி வருவதாகவும், ஏனைய இடங்களுக்குப் பரவி விடுமோ என அஞ்சுவதாகவும் கூறப்பட்டது.

## நீர்வழங்கல் திட்ட

யாழ்ப்பாணம், செவ். கரவெட்டி நீர்வழங்கல் திட்டத்தின் நிர்மாணவேலைகள் ஆரம்பமாகிவிட்டன. உள்ளூராட்சி அமைச்சின் வடமாநிலப் பொறிஞர் திரு. சி. புவனேஸ்வரன் மேற்பார்வையின்கீழ் இயங்கிவரும் இத்திட்டம் சுமார் 15 மாதங்களில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ந. நி.)

## இவற்றின் விலை இதோ

கொழும்பு, திங்கள் இறக்குமதி செய்யப்பட்ட சில குறிப்பிட்ட ஜவுளிகளின் விலைகளை அரசாங்கம் நிர்ணயம் செய்துள்ளது. விலைநிர்ணயம் செய்யப்பட்ட சில ஜவுளிகளும் அவைகளின் விலைகளும் வருமாறு:-

சற்றின் ரூ. 3.59, கிரேப் ரூ. 3.35, மஸ்லின் ரூ. 3.20, அச்சடித்த பெப்ரிக் ரூ.2.12, வெள்ளை, நிறமூட்டப்பட்ட பப்ளின் ரூ. 2.12 லோங் குளோத் ரூ. 1.90, வெள்ளை கொட்டன் 2.67, காக்கி, நீலம், வெள்ளை, டிரில் ரூ. 3.00, சற்றின் டிரீல் ரூ. 4 61.

## கோப்பாய் கி. ச. தலைவர் தேர்தல்

யாழ்ப்பாணம், செவ். கோப்பாப் கிராமசபைத் தலைவர் தேர்தல் வருகிற 15-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. திரு. தி. பரமானந்தராஜாவுக்கு கட்சி பேதமின்றி ஆதரவு இருப்பதாயும் அவரும் கட்சியின் பெயரால் இன்றி தம் சொந்த முறையிலேயே இப்பதவிக்கு போட்டியிடுவதாகவும் தெரிகிறது.

## ஹோப்பில்...

கொழும்பு, திங்கள் கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்க மிதக்கும் ஆஸ்பத்திரியான 'ஹோப்' கப்பலிலுள்ள மாலுமிகள் சிலருக்கு கொப்பளிப்பான் நோய் பிடித்துள்ளது

# அகில இலங்கை ரீதியில் கோரிக்கைவிட யோசனை

## தமிழ் பட்டதாரிகளிடம் அமிர்தலிங்கம் தெரிவித்தார்

சுழிபுரம், திங்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியில் வேலையற்ற பட்டதாரிகளாக இருக்கும் பலர் அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் திரு. கே. சதானந்தன் தலைமையில் வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சி செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கத்திடம் சென்று தங்கள் நிலைமையையும் தாங்கள் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளையும் எடுத்து விளக்கினர். திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு தங்கள் நிலைமையை விபரமாக எடுத்து விளக்கிக் கூறினர்.


தமிழ் பட்டதாரிகள் நிலைமைபற்றி ஆட்சிமன்றத்தில் பலமுறை எடுத்துக் கூறப்பட்டுவிட்டது. எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகவேயுள்ளது. தமிழ் பட்டதாரிகள் வேலையின்றி இரண்டாயிரம் பேர் இருக்கின்ருர்கள் என்ருல் சிங்களப் பட்டதாரிகள் எண்ணுயிரம் பேர் இருக்கின்றனர். தமிழ், சிங்கள பட்டதாரிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்த நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்படி எடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஏதும் பலன் கிடைக்கக்கூடும். தமிழ் பட்டதாரிகளாகிய நீங்கள் மட்டும் நடவடிக்கை எடுக்க முயன்ருல்அதுவகுப்புவாதக் கண் கொண்டு பார்க்கப்படும். அத்துடன் பயன் இல்லாமல் முடிந்து விடும். தமிழரசுக்கட்சியினராகிய நாம் 1. திருமலை புனித நகர் பிரகடனம், 2. மாவட்டசபைமசோதா, 3. வேலையற்ற தமிழ் பட்டதாரிகள் விடயம் போன்ற முக்கிய விடயங்கள்ஏற்றுக் கொள்ளப் படாததாலேயே அரசாங்கத்தை விட்டு வெளியேறினேம் என்று அவர் கூறினர்.

திரு. எம். திருச்செல்வம் அமைச்சராக இருக்கும் போது மந்திரிசபையில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் விடயமாக பலமுறை எடுத்துக் கூறப்பட்டன. அவை எல்லாம் தட்டிக் கழிக்கப்பட்டன. திரு. திருச்செல்வம் கட்சியில் தனது அமைச்சுக்குக் கீழாகிலும் பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தை உருவாக்கினர். அவர் அமைச்சர் பதவியைத் துறந்ததால் அதுவும் கைவிடப்பட்டுள்ளது. அமைச்சர் சபைக் கூட்டத்தில் பேசப்படும் விடயங்கள் யாது என்பது ஒன்றும் எமக்கு தெரியவில்லை. இந்த நேரத்தில் தென்னிலங்கையிலுள்ள சிங்கள பட்டதாரிகளுடன் கலந்துகொண்டு வேலை வழங்குமாறு அரசாங்கத்தைக் கேட்கவேண்டும். அப்படிச் செய்யாது தனித்து ஏதும் நடவடிக்கை எடுக்க முயன்ருல் இன்றைய நிலையில் எவ்வித பயனும் ஏற்படமாட்டாது என்று திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்தார்.

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
சிறந்த முறையில்
உத்தரவாதத்துடன்
உங்கள்
டயர்களைப் புதுப்பிப்பதற்கு
சிறந்த இடம்
நோர்தேன் இன்டஸ்றீஸ்
8/1 ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
போன்: 7158

எல்லோர்க்கும் எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
நீடித்து உழைப்பதில் நிகரேதும் இல்லாதது!
யூ ஆ ச!
பற்றறிகளே!


வடமாகாண
ஏக விநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி றேட் --- யாழ்ப்பாணம்.

புதிய ஊஷா USHA பிறிமா சீலிங் விசிறி

அழகே உருவாக அமைக்கப்பெற்றது— அழகுக்கு அழகு செய்வது—
பாவிக்கப்படும் இடமெல்லாம் ஓர் தனிக் கவர்ச்சியை அளிப்பது.
தரத்திற்கும், நம்பிக்கைக்கும் உலகப் புகழ் பெற்றது—ஊஷா அதே சிறந்த தரத்திலிருந்து மாறுபட்டதல்ல
ஊஷா சீலிங் விசிறியை சொந்தமாக்கிக் கொள்வதில் நீங்களும் பெருமையடைவீர்கள்.
1400 mm (56") சுவீப்ஸ்—220—240 வோல்ஸ் 50 சைக்கில் ஏ. சி.யில் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## கல்வி

கணக்கியல், வர்த்தகமும் நிதியும், வர்த்தக கணிதம், சுருக்கெழுத்து பொருளாதாரம் முதலியன 1969 பங்குனி, மார்கழி க. பொ. த. பரீட்சைகளுக்காக 47 வருட அனுபவமுள்ள வர்த்தக ஆசிரியரால் தபால் மூலம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 475

---

பாடசாலைகளில் மூன்றும் வகுப்புத் தொடக்கம் ஆங்கிலம் கற்பிக்கவேண்டுமென்னும் பிரமாணத்திற்கமைய, ஆங்கிலம், எண்கணிதம், தமிழ் ஆகிய மூன்று பாடங்களும் மாலை மூன்று மணி தொடக்கம் ஆறு மணி வரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் 3, 4, 5, 6, 7-ம் வகுப்புகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 472

## விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள்:

நல்ல நிலைமையிலுள்ள ROYAL ENFIELD (1 ஸ்ரீ) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R. நல்லையா (சின்னக்கிளி), முனியப்பர் கோவிலடி, K. K. S. றேட், கோண்டாவில். 483

---

காணி:

கொக்குவில் ஸ்டேசனுக்கும் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் மத்தியிலுள்ள வெட்டுறுப்பான காணி எட்டுப் பரப்பு இரு கூறுகப் பிரித்து விற்கப்படும். விபரங்களுக்கு தரகரின்றி நேரில் 21, செம்மணி வீதி, நல்லூரில் தொடர்புகொள்ளவும். செ. இரத்தின சபாபதி. 484

## தேவை

பைக்கற் போடக்கூடிய பெண்கள் தேவை. அலன் டி கோ, 23/1, செட்டித்தெரு, நல்லூர். 481

## தேவை

மனேஜர்:

ஒட்டுச்சுட்டான் முத்தையன்கட்டு வலதுகரை 1-ம் படிவ படித்த வாலிபர் ப. நோ. கூ. சங்கத்திற்கு பயிற்றப்பட்ட மனேஜர் தேவை. வயது 22 35 கல்வி க. பொ. த. சித்தி, பிணை ரொக்கம் 1000 - ஆதனம் 2000 - சம்பளம் சகல படிகளுமுட்பட 125/- ஆரம்பம். காரியதரிசிக்கு 30-1-69க்கு முன் விண்ணப்பிக்கவும். 487

## காணவில்லை

13-1-69 காலை 11 மணியளவில் சிவசக்தி கூல் பார்க்கு முன்பாக கூட்டுறவு பரிசோதகர் பதவிக்கான நியமனப்பத்திரமும், வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் அடங்கிய பெரிய என்வலப் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ச. சந்திரலேகர். 485

## இடமாற்றங்கள்

காலி, திங்கள்

பொலிஸ் சுப்பிரின்டன் திரு. வை. டி. செனரத் காலி பொலிஸ் அதிபராகக் கடமை ஏற்றுள்ளார். காலி பொலிஸ் அதிபர் கொழும்புப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காலி உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. சி. அம்பிகாபதி தங்காலைக்கு இடமாற்றம் பெற்றுச்செல்ல அவரின் இடத்துக்கு திரு. ஏ. ஆர். முசபார் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாகொட பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் திரு. ஏ. எச். எம். யௌபார் காலி பொலிஸ் தலைமைக்காரியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

0 0 0

யாழ்ப்பாணம் திங்கள்

கொழும்பு தொழிற்கந்தோரில் கடமையாற்றிய திரு. து. வைத்திலிங்கம் யாழ்ப்பாணம் காரியாதிகாரி காரியாலயத்துக்கு இம்மாதம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளார்.

## கேள்விப் பத்திரங்கள்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம், 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்திற்குக் கிடைக்கவிருக்கும் இரண்டரை லட்சம் "சி" தரச் சாக்குகளை, தைக்கக் கூடியவை, தைக்கத் தேவையில்லாதவை ஆகிய இரு தரங்களாகப் பிரித்து, தைக்கத் தேவையில்லாதவையை 50 சாக்குகள் கொண்ட கட்டுகளாகவும், மிகுதியை தைத்து 50சாக்குக்கொண்ட கட்டாகவும் கட்டவேண்டும்.

மேற்படி வேலை தொடர்பான கேள்விப்பத்திரங்களுக்கு 24-1-69 மாலை 4மணிக்கு முன்னர் ரூபா 25/- செலுத்தி விண்ணப்பப்பத்திரங்களை நிபந்தனையுடன்பெற்றுக்கொள்ளவும். தெரிந்தெடுக்கும் ஒப்பந்தகாரர் ரூபா 500 - பிணை செலுத்த வேண்டும்.

1148 காரியதரிசி.

## புனரமைப்பு

அளவெட்டி, திங்கள்

அரைலட்ச ரூபா செலவில் கடுகம்பானை கவணவத்தை வைரவர் ஆலயம் புனரமைப்புச் செய்யப்படவிருக்கிறது.

இவ்வாலய திருப்பணி வேலைகள் சென்ற வருடம் பாலஸ்தானம் செய்யப்பட்டு பிரபல சிற்பாசாரியார்கள் செய்து வருகின்றனர்.

## கி. ச தலைவர்கள்

காலி, திங்கள்

திரு. டானிவிதானுச்சி உடுகம கிராமசபைதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்

திரு. விக்ரர் விஜயசேகரா ஏகமனதாக கினிமுமகிராமசபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

# பத்து நாட்களில் 14 விபத்து: 19 கொலை

பம்பலப்பிட்டி, திங்கள்

ஜனவரி மாதம் முதல் 10 நாட்களிலும் 14 கடும் விபத்துக்கள் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடமும் ஜனவரி மாதத்தில் முதல் பத்து நாட்களிலும் 14 விபத்துக்கள் நடைபெற்றதாகப் பொலிஸ் அறிக்கை ஒன்று கூறுகிறது.

1968,69ம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரே எண்ணிக்கையான விபத்துக்கள் நடைபெற்றது போலவே கொலைகளின் எண்ணிக்கையும் காணப்படுகிறது. சென்ற வருடம் முதல் பத்து நாட்களிலும் 19 கொலைகளும், இந்த வருடத் தொடக்கத்தில் 18 கொலைகளும் நடைபெற்றுள்ளன.

## இன்று ஆண்டு விழா

அராலி, செவ்வாய்

அராலி தெற்கு களவத்துறை சன சமூக நிலையத்தினர் தமது ஆண்டுவிழாவை இன்று பொங்கல் தினத்தன்று பல கலைநிகழ்ச்சிகளுடன் நடாத்த பல ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். அந்நிலையநாடகமன்ற உறுப்பினர் 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தையும் மேடை ஏற்றவிருக்கின்றனர்.

## ஆஸ்பத்திரியில் கட்டாக்காலிகள்

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை அரசினர்பிரசவ மருத்துவமனைக்கு பாதுகாப்பு எல்லைவேலிகள் இல்லாததினுல் இவ்விடுதிக்குள்கட்டாக்காலி ஆடுமாடுகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாம்.


வடபகுதி விவசாயிகளுக்கு
எமது பொங்கல் வாழ்த்துக்கள்!

★ நெல்
★ புகையிலை
★ வெங்காயம்
★ உருளைக்கிழங்கு
★ மிளகாய்
★ வாழை
மற்றும்
★ பழமரங்கள்

அதிக பயிரிடுக.

வடபகுதி விவசாய உற்பத்தியாளர்
கூட்டுறவுச் சமாசம்
111, பிரதான வீதி --- யாழ்ப்பாணம்.



எல்லோர்க்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்!



றட்ஜ் தரத்துக்கும் வசதிக்கும்
★ எஃகு உருவ அமைப்பு ★ 'டெரி' ரகசீற் ★ சாமான் பையும்
மற்றும் உபகரணங்களும்
ஒரு 'றட்ஜ்' சைக்கிளை வாங்கி உங்கள் வாழ்நாள் முழுவதும் உபயோகியுங்கள்.
மற்றும் உங்களுக்குத் தேவையான
சகல விதமான மின்சார உபகரணங்களும் "பல்ப்" வகைகளும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்,

நியூரோன் எலெக்றிக்கல்ஸ்

("றட்ஜ்" சைக்கிள், எஸ்லோன், பி. வி. ஸி. பைப் ஆகியவற்றின் வடமாகாண பிரதான விற்பனையாளர்கள்.)
141—143, ஸ்ரான்லி றேட் ::—:: யாழ்ப்பாணம்.
போன்: 7016



எல்லோரும் விரும்புவது! எங்கும் கிடைப்பது!!

பீ. வீ. எம். ஒரென்ஜ் பீடிகளே!!!

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது அன்பு கலந்த
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!




பீடி உலகில் இன்று
தனக்கென ஒரு தனி இடத்தை
பெற்றுக்கொண்டு மிக வேகமாக
மக்கள் மனதில் தனது
பெயரை நிலைநாட்டி வருபவை

பீ. வீ. எம்.
ஒரென்ஜ் பீடிகளே

அளவு கடந்த காரமோ
அதிக மென்மையோ
இல்லாமல் புகைத்து
பூரண திருப்தி காண
பொருத்தமான காரம்
புகைபிடிப்போரில் பெரும்பாலோர்
விரும்பும் கணக்கான காரம்.

ஆகையினுல்தான் பீடி பிரியர்கள் இன்று ஒரென்ஜ் பீடிகளையே கேட்டு வாங்குவதும், தமது ஞாபகத்தில் வைத்திருப்பதும்
ஒரென்ஜ் பீடிகளே!

தயாரிப்பாளர்
பீ. வீ. எம். ஒரென்ஜ் பீடி கம்பெனி
நவாலி றேட், ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸிகப் பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் ஸ்தாபனத்தார் தமது அன்பு பொங்கும்

# பொங்கல் வாழ்த்துக்களை

மகிழ்ச்சி பொங்க தெரிவிக்கின்றனர்

**பொங்கல் திருநாளை பொலிவுடன் கொண்டாட இன்று காலை 10-30 காட்சியுடன் குதூகல ஆரம்பம்!**

| செயின்ஸ்தான் | முருகன் | ஓடியன் | ராஜா | கசினோ |
|---|---|---|---|---|
| (கொழும்பு) | (ஹிந்துப்பிட்டி) | (கல்கிசை) | (யாழ்ப்பாணம்) | (மாத்தளை) |

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். கவர்ச்சிக்கன்னி ஜெயலலிதா, சௌகார்ஜானகி

சோ, அசோகன், மனோகர்

மற்றும் பலர் நடித்த

## எம். ஜி. ஆரின் 100-வது படம்




டைரக்ஷன் : சாணக்கியா

இசை : எம். எஸ் விஸ்வநாதன்

(எஸ். ரி. ஆர். வெளியீடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.